முற்பகல் 10–35

மேலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இரண்டு மாவட்டங்களிலும் rehabilitation செய்வதற்காக அதாவது சரிக்கட்டுவதற்காக, நட்டத்தைச் சரிக்கட்டுவதற்காக, விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு, 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்தக் கொள்முதல் விலை 50 பைசா குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 ஆண்டுக் காலம் முடிந்தபிறகு, நிச்சயமாக மற்ற மாவட்டங்களில் என்ன தொகை கொடுக்கப்படுகிறதோ, அதே விலைக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பாலை வாங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், நீங்கள்தான் பேசப் போகிறீர்கள்; உங்கள் கருத்துகளை நீங்கள் அப்புறம் பேசும்போது சொல்லிக்கொள்ளுங்கள், உட்காருங்கள்.

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பன்னிரண்டு முதல் பதினெட்டு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.